# இளங்கலைத் தமிழ்ப் படைப்பாக்கம் - பாடத்திட்டம்
# முதன்மைப் பாடங்கள்

பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ் இளங்கலைப் பாடத் திட்டத்தோடு ஒவ்வொரு பருவத்திலும் படைப்பாக்க நோக்கம் கொண்ட தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன. இத்தாள்களைக் கல்லூரியின் ஆசிரியர்களோடு கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற புனைவுத்தளங்களில் தங்களை நிலைநிறுத்திக்கொண்டுள்ள எழுத்தாளர்களை அழைத்துத் தொடர் பயிலரங்குகள் வழியாகப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழகத்தில் இளங்கலைத் தமிழ் (படைப்பாக்கம்) பட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பாடத்திட்டம். 140 தரப்புள்ளிகள் (Credits)

| | |
|---|---|
| பருவம் - 1 | தற்கால இலக்கியம், உரைநடை இலக்கியம், உரைநடையும் படைப்பாக்க நுட்பங்களும் |
| பருவம் - 2 | நன்னூல் - எழுத்து, கணிப்பொறியும் இணையமும், சிறுகதையும் படைப்பாக்க நுட்பங்களும் |
| பருவம் - 3 | நன்னூல் - சொல், பக்தி இலக்கியம், நாவலும் படைப்பாக்க நுட்பங்களும், மொழி - இசங்கள் - படைப்பு |
| பருவம் - 4 | யாப்பருங்கலக்காரிகை - தண்டியலங்காரம், இலக்கணம் - II நாட்டுப்புறவியல், கவிதையும் படைப்பாக்க நுட்பங்களும், |
| - | |
| பருவம் - 5 | புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள், காப்பியங்கள், இலக்கியத் திறனாய்வு, பொது மொழியியல், நாடகமும் படைப்பாக்க நுட்பங்களும், சிந்தனையும் படைப்பாக்கமும். |
| பருவம் - 6 | சங்க இலக்கியம் - அகம், சங்க இலக்கியம் – புறம், தமிழ் மொழி வரலாறு, திரைக்கலையும் படைப்பாக்க நுட்பங்களும், மொழிபெயர்ப்பும் மொழியாக்க நுட்பங்களும், உலக இலக்கியப் பார்வைகள். |

மேலும், வேலை வாய்ப்புகளை வழங்கும் படிப்புகளைக் கல்லூரி வளாகத்திலும், வளாகத்திற்கு வெளியே தொழில் நிறுவனங்களோடு செய்துகொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கற்பிக்கும் திட்டங்கள் உள்ளன. முன்னடுக்கில் மனித வாழ்க்கையைப் புரிந்துகொள்ளவும் எழுத்தின் ஆழத்திற்குச் செல்லவும் தேவையான விதத்தில் சமூகவியல், மானிடவியல்,

வரலாறு, உளவியல், மொழியியல் போன்ற பாடங்களில் அறிமுகக்கல்வி (Fundamentals) வழங்கப்படும்.

**கூடுதல் படிப்பு**

மூன்றாவது, பின்னடுக்கு வரம்புகளைத் தாண்டி (Edge +) என அழைக்கப்படும். இதில் தமிழோடு தொடர்புடைய திறன் வளர்ப்புப் பயிற்சி வகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- நடிப்புக்கலையின் அடிப்படைகள் - Basics of Acting
- நடனக்கோர்வைப் பயிற்சிகள் -choreography
- மேடை நடிப்பும் காமிரா நடிப்பும் - Stage Acting and Camera Acting
- மரபுக்கலைப் பயிற்சி - Practices in Traditional theatres
- மேடை நிர்வாகமும் நிகழ்வு மேலாண்மையும் - Stage managements and Event managements
- வண்ணம் தீட்டலும் கலைப்பொருள் உருவாக்கலும் -Colours and Crafts
- அச்சிதழ்களுக்குச் செய்திக்கட்டுரை எழுதுதல் - Writing to Print media
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு எழுதுதல் - Writing to Television
- குறும்படங்கள் உருவாக்குதல் பட்டறை - Short film workshop
- விளம்பரப் படங்கள் தயாரிப்பு - Ad film making
- நெடுந்தொடர் எழுத்தாக்கப்பயிற்சி - Serial Writings
- சினிமாவுக்கு வசனம் எழுதுதல் பயிற்சி -dialogue writing
- இதழ் உருவாக்கம், புத்தகமாக்கம் -Journal and Book editing
- இணையத்தில் தமிழ்ப் பயன்பாடு - Tamil in web world
- வலைப்பூ உருவாக்கப் பயிற்சி - Blogger making
- நிழற்படமெடுத்தலும் காமிரா இயக்கமும் -Experience to Still and movie camera
- பேச்சுக்கலை, விவாதக்கலை (Art of delivery)
- களப்பணிகள் - (Field work methodology)
- தொல்லியல் வாசிப்புகள் (Reading Archaeology materials)
- ஆளுமைத் திறன் வளர்ச்சி (Personality development)

பயிற்சி வகுப்புகள் கல்லூரி வளாகத்தில் மட்டுமல்லாது தனியார் நிறுவனங்களில் இணைந்தும் அளிக்கப்படும். கூட்டுப்பயிற்சிக்காகப் புகழ்பெற்ற நிறுவனங்களோடும் ஆளுமைகளோடும் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. அயல்நாட்டுக் கல்வி நிறுவனங்களும் அமைப்புகளும் பங்கேற்க உள்ளன. கலை, இலக்கியத்துறை வல்லுநர்கள் ஆலோசனைக்குழுவில் இருக்கிறார்கள்.